# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,209 — 1936 ம் ஆடு பங்குனிமீ 20 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் லோறிஸ் றேட்டிலிருந்து டிக்மன்ஸ் றேட் வரைக்கும், கொழும்பு காலி றேட்டை அகலிப்பதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 487. குறிச்சி—பம்பலப்பிற்றியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 23 | பம்பலப்பிட்டி றேட்டில் இறைவரி இல. 55 கொண்ட ஆதனத்தின் பகுதி | தோட்டம், 20 வருஷம் சென்ற 3 தென்னை உள்ளது | பீ. ஈ. லோசின் நோனு, ஸ்கெலிற்றன் றேட்டு, ஹவலக்ரவுன் | 0 | 0 | 3·72 |
| 25 | ஷை .. | தோட்டம், 20 வருஷம் சென்ற 3 தென்னையும், 5 வருஷம் சென்ற அண்டற மரமும் ஒரு கட்டடமும் (கற்கூரை) உள்ளது | ஷை .. | 0 | 0 | 3·49 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எண்ணபடி சனுதிகார மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துக்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1936 ம் ஆடு சித்திரை (ஏப்பிறில்) மாசம் 21 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1936 ம் ஆடு (பங்குனி) மார்ச்மீ 16 ந வ.

ஆர். எச். வைட்ஹோான்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாக்கந்துற—ஹொறத்தாப்பொல டிஸ்திறிக் றேட் கொம்மிற்றி றேட்டும், நாறம்மல—தங்கொற்றுவ பகிரங்க வேலைப்பகுதி றேட்டும் சந்திக்குமிடத்தில் றேட்டிற்காகக் காணியை சேமித்துவிடுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

படத்து இல. 276 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்தின் 1 ம் அனுபந்தம். குறிச்சி—வடமேன் மாகாணத்தில், குருனுக்கல் டிஸ்திறிக்கில் கற்றுகம்பொலஹற்பத்துவில் பிற்றிக்கல் கோறளையில் உள்ள மாக்கந்துற.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 64 | இஸ்வறகலேவத்த .. | தென்னந்தோட்டம் .. | கொழும்பைச்சேர்ந்த திரு ஆர். துரைச்சாமி .. | 0 | 0 | 12·9 |
| 65 | ஷை .. | பாணிலம் .. | ஷை .. | 0 | 0 | 10·1 |
| 66 | ஷை .. | தென்னந்தோட்டம் .. | ஷை .. | 0 | 1 | 11·7 |
| 67 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 3 | 14·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூமலாய் 1936 ம் ஆடு சித்தரை (ஏப்ரல்) மாசம் 25 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு குருனுக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருனுக்கல் கச்சேரி,
1936 ம் ஆடு பங்குனி (மார்ச்)மீ 13 ந வ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருனுக்கல் டிஸ்திறிக்.

## டிஸ்திறிக் ரோட் கோம்மிற்றி அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தலைப்பற்றிய அறிவித்தல்.

நுவர களாவிபகுதி டிஸ்திறிக்ரோட் கொம்மிற்றி அங்கத்தவர் தெரிவு.

இத்தால் அறிவிப்பது 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 26 ம் பிரிவின்படி 1935-1937 ம் ஆண்டுகளுக்கு அதாவது 1936-1937 ம் ஆண்டு களுக்கு நுவர களாவிய டிஸ்திறிக்ரோட் கொம்மிற்றியின் அங்கத்தவராயிருந்து தனது நியமனத்திலிருந்து நீங்கிய கனம், ஜீ. ஏ. எச். பிலிப்பையா, மருதங்கடவை, அவர்களுக்கு பதிலாக அங்கத்தவராக வரவிரும்புவோர் தங்கள் எண்ணத்தை தெரிவு நாளுக்கு பத்து நாட்களுக்கு முன்பாக வடமத்திய மாகாணப் பிறவின்சியல்ரோட் கொம்மிற்றியின் சங்கத்தலைவருக்கு எழுத்தி லறிவிக்க வேண்டும்.

மேற்சொல்லிய கட்டளைச் சட்டத்தின் 35 ம் பிரிவின்படி நுவரகளாவிய டிஸ்திறிக்ரோட் கொம்மிற்றிக்கு ஓர் அங்கத்தவரை 1936 ம் ஆண்டு சித்திரை மாதம் 20 ந் திகதி பின்னேரம் 2 மணிக்கு அனுராசபுரக் கச்சேரியில் தெரிவு செய்யப்படும்.

எல். எல். ஹண்டர்,
பிறவின்சியல் ரோட்கொம்மிற்றிச் சங்கத்தலைவர்.

பிறிவிண்சியல் ரோட்கொம்மிற்றிக் கந்தோர்,
அனுராசபுரம, 1936 ம் ஆண்டு பங்குனிமீ 17 ந் உ.

---

## நொத்தாரிஸ் பிரதம பரீட்சை.

சிங்களப் பாஷையில் அல்லது தமிழ் பாஷையில் தொழில் நடத்தும்படி பிரசித்த நொத்தாரிஸ்மாராகும் நோக்கத்தோடு தொழில் கற்கப் பொருந்தும் உடன்படிக்கைக்குட்பட வெண்ணும் அபேட்சகர்களுக்கான ஒரு பரீட்சை வித்தியாகர்த்தரால் கொழும்பைச்சேர்ந்த கொம்பனித் தெருவிலுள்ள அரசாட்சியாரின் துவிபாஷா பாடசாலையில் 1936 ம் ஞு டிசெம்பர் (மார்கழி) மாசம் 1ந் திகதியிலன்றும்அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

2. இப்பரீட்சைக்குப் பிரவேச விண்ணப்பம் செய்வதற்குமுன் ஒவ்வொரு அபேட்சரும் தாம் வாசம்பண்ணும் மாகாணத்துக் கவண்மேந்து ஏஜன்றரிடத்தே குறைந்தபட்சம் மூன்று மாசமாவது முன்னேற அறிவித்தல் கொடுத்திருத்தல வேண்டும். அவ்வறிவித்தலில் அபேட்சர் தாம் என்ன பாஷையிலும் எந்த டிஸ்திறிக் ஊர்ப்பிரிவிலும் தொழில் நடத்த உத்தேசித்திருக்கிறரென்று காட்டியிருத்தல் வேண்டியதுமன்றி, மேற்சொல்லிய மூன்று மாசமும் விண்ணப்பஞ்செய்யும் தேதிக்குமுன் முடிந்திருத்தலும் வேண்டும்.

3. விண்ணப்பபத்திரம் 1907 ம் ஆண்டின் 1 ம் சட்டத்தோடிணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையிலுள்ள A மாதிரிப்படி முடித்துப் பதிவுகாரியஸ்த தலைவருக்கு மேல் விலாசமிட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டியதுமன்றி, ஆங்கில பாஷையில் எழுதப்பட்டதாயும் பின்வரும் விவரங்கள் கொண்டதாயும் இருத்தலும் வேண்டும்; அவ்விவரங்களாவன :—

(i.) விண்ணப்பம் செய்பவர் வசிக்குமிடம்.
(ii.) விண்ணப்பம்செய்யும் ஆண்மகனின் அல்லது பெண்ககளின் வயசு.
(iii.) தொழில் பழகும்பொருட்டு அவர் சேவிக்க எண்ணியிருக்கும் அத்வக்காத்தாரின் அல்லது பிறககிராசியாரின் பெயர்.
(iv.) அவர் தொழில்நடத்த உத்தேசித்திருக்கும் டிஸ்திறிக் ஊர்ப்பிரிவும் பாஷையும்.

4. உடன்படிக்கைப்பட்ட லிகிதர்களுக்கு 15 இடங்கள் காலியாகவுண்டு. வதுளை, அனுராசபுரம், மட்டக்களப்பு ஆகிய இந்த டிஸ்திறிக். ஊர்ப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோரிடமாக இக்காலியான இடங்களில மூன்று 1927 ம் ஆண்டின் 24 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தியபடியான 1907 ம்ஆண்டின் 1 ம் இலககச் சட்டத்தின் 7 (2) ம் பிரிவின் பிரகாரம் பிரவேச விண்ணப்பம் செய்யும் அபேட்சர்களுக்கென்று புறம்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகை விண்ணப்பம் செய்யும் அபேட்சர்கள் தாங்கள் பின்சொல்லிய யோக்கியதைகளில் ஒன்றேனும் ஒன்றுக்கதிகமேனும் உடையவர்களென்று அத்தாட்சி காட்டவும் வேண்டும், அவ்யோக்கியதைகளாவன :—

(*a*) சென்ற பத்து வருஷ காலமாக அந்த டிஸ்திறிக் ஊர்ப்பிரிவில் தாமாக அல்லது தம்மனைவிமூலம் அல்லது தம் கணவன் மூலம், அல்லது தம் மனைவியின் உரித்துமூலம் தாம் அல்லது தம் கணவனின் உரித்துமூலம் தாம், பிரயோசனமாக அனுபவித்துவந்த சொந்தக் காணியாட்சி, அல்லது

(*b*) அந்த டிஸ்திறிக் ஊர்ப்பிரிவில் பிறந்திருத்தல், அல்லது

(*c*) தொடர்ச்சியான தாஜுஞ்சரி இடைவிட்டதாஜுஞ்சரி, அந்த டிஸ்திறிக் ஊர்ப்பிரிவில் குறைந்தபட்சம் பத்துவருஷகால வாசம்.

5. விண்ணப்பபத்திரம் " Ceylon Postage and Revenue " என்னுஞ் சொற்கள் அதில் அச்சிடப்பட்டுள்ள முறைப்படி கிறுக்கிறுக்கப்பட்ட 10 ரூபா முத்திரை ஒட்டப்பெற்றதாயிருத்தல் வேண்டியதுமன்றி அதோடுகூட (*a*) அவர் கவண்மேந்து ஏஜன்றரிடத்தே கொடுத்த அறிவித்தல் தம்மிடம் வந்து சேர்ந்ததென்று மறுமொழியாக கவண்மேந்து ஏஜன்றர் அனுப்பிய பத்திரமும் (*b*) அபேட்சரின் நல்லொழுக்கத்தையும் யோக்கியதைகளையும்பற்றி அவைகளில் ஒன்றுவது மூன்று மாசத்துக்கு முற்படாத நிதரிசனபத்திரங்களும் (அபேட்சர் இதற்குமுன் வேலையில் எற்பட்டிருந்திருப்பாராகில், கடைசியாக அவரை வேலைக்கு வைத்தவரிடமிருந்தும் ஒரு நிதரிசனபத்திரம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்) (*c*) அபேட்சரின் வயசைப்பற்றிய சாட்சியமும் அனுப்பிவைக்கப்படவும் வேண்டும்.

6. (*a*) இப்பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்கான நிபந்தனைகளை அவர் நிறைவேற்றுததினை நிமித்தம் அபேட்சர் ஒருவரை ஏற்றுக்கொள்ளாது தள்ளிவிடுமிடத்து அவருடைய விண்ணப்பபத்திரத்தில் ஒட்டியுள்ள முத்திரைகளின் பெறுமதியில் ஐந்தில் மூன்று பங்கு அவருக்குத் திரும்பக்கொடுத்துப்போடப்படும்.

(*b*) இப்பரீட்சைக்குப் பிரவேசிக்கவிடப்பட்ட அபேட்சர் ஒருவர் பரீட்சைத் தேதிக்குக் குறைந்தபட்சம் 7 நாட்களுக்குமுன் தாம் இப்பரீட்சைக்குப் பிரவேசியாது விடப்போவதைப்பற்றி பதிவுகாரியஸ்த தலைவருக்கு அறிவித்தல கொடுப்பாராகில், அவருடைய விண்ணப்பபத்திரத்தில் ஒட்டியுள்ள முத்திரைகளின் பெறுமதியில் அரைவாசி அவருக்குத் திரும்பககொடுத்துப்போடப்படும்.

(*c*) வேறெவ்விஷயத்திலும் யாதொரு பணமும் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது.

7. ஆங்கில பாஷையில் எழுதிய விண்ணப்பபத்திரத்தை அனுப்பிவைப்பதோடு கூட அபேட்சர் ஒருவர் தம் சொந்தக் கையெழுத்திலேயே தாம் தொழில்நடத்த உத்தேசித்திருக்கும் பாஷையில் எழுதிய ஒரு விண்ணப்பபத்திரமும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

8. விண்ணப்பபத்திரங்கள் இந்தக் கந்தோரில் 1936 ம் ஞு ஒக்றோபர் (ஐப்பசி)மீ 23 ந் திகதி பிற்பகல் 2 மணிக்குப் பிந்தாமல் வந்துசேர்ந்தவிட வேண்டும்.

9. விண்ணப்பங்கள் செய்தவர்கள் இன்னர் இன்னர் என்பதை நிச்சயிப்பதற்காகத் தெரிபடும் பொருட்டாகவும் தங்கள் பரீட்சைப் பிரவேசச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டாகவும் அபேட்சர்கள் பின்சொல்லிய தேதிகளில் எத்தேதியிலுமாவது இந்தக் கந்தோருக்கு வரவேண்டும் :—

1936 ம் ஞு நொவெம்பர் (கார்த்திகை)மீ 23 ந் தேதி தொடக்கம் 27 ந் தேதி வரையிலும் 30 ந் தேதியிலன்றும், முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்குமிடையில்.

10. பரீட்சைக்குக் குறிக்கப்பட்ட பாடங்கள் இதனடியிற் சேர்த்துள்ள அட்டவணையிற் காட்டப்பட்டிருப்பதுமன்றி, இவ்வட்டவணையில் புள்ளிவகையும் (மார்க்ஸ்) நேரசூசிகையும் விவரிக்கப்பட்டுமிருக்கின்றன.

11. கீழைத்தேசக் கல்விப்பயிறசிச் சங்கத்தாரால் (ஓறியென்றல் ஸ்றடீஸ் சொஸைஸெயற்றியாரால்) நடத்தப்படும் இடை அல்லது கடைப் பரீட்சையில் அல்லது லண்டன் சர்வகலாசாலையின் அல்லது சென்னைச் சர்வகலாசாலையின் B. A. பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் என்னும் பிரிவுகளிற் சித்தியடைந்த அபேட்சர்களுக்கு வாசகஞ்சொல்ல எழுதுதல், வியாசம், வாசினை, இலக்கணம் ஆகிய இப்பாடங்களிற் பரீட்சிக்கப்படாது நீக்கிவிடப்படுவதற்கு உத்தரவு கொடுக்கப்படுகின்றது. அவ்வண்ணம் நீக்கிவிடப்பட வேண்டுமென்று உரிமையாடும் அபேட்சர்கள் தாங்கள் வேண்டிய யோக்கியதையுடையவர்களென்று காட்டுவதற்கு அத்தாட்சி அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஜே. சீ. டபிள்யு. றொக்,
பதிவுகாரியஸ்த தலைவர்.

பதிவுகாரியஸ்த தலைவர் கந்தோர்,
கொழும்பு, 1936 ம் ஞு மார்ச் (பங்குனி)மீ 13 ந் உ.

மேற்சுட்டிய அட்டவணை.

பரிட்சைக்குரிய பாடங்களும் புள்ளிகளும் (மார்க்ஸ்).

| | | ஆகக்கூடிய புள்ளித்தொகை. |
|---|---|---|
| கணிதம் | .. | .. 100 |
| வாசகம்சொல்ல எழுதுதல் | எழுத்து இலட்சணம் | .. 50 |
| | எழுத்துக்கூட்டுதல் | .. 50 |
| வியாசம் .. | .. | .. 50 |
| வாசினை | .. | .. 50 |
| இலக்கணம் | .. | .. 100 |

நேரசூசிகை.

| | |
|---|---|
| 1936 ம் ஞு டிசெம்பர் (மார்கழி)மீ 1 ந் தேதி | முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரையும், கணிதம் (சிங்களத்திலும் தமிழிலும்).<br>முற்பகல் 11 மணி தொடக்கம் 11-30 மணிவரையும், வாசகஞ்சொல்ல எழுதுதல் (சிங்களத்திலும் தமிழிலும்).<br>பிற்பகல் 12-45 மணி தொடக்கம் 1-45 மணிவரையும், வியாசம் (சிங்களத்திலும் தமிழிலும்).<br>பிற்பகல் 2 மணி தொடக்கம் 3-30 மணிவரையும், இலக்கணம் (சிங்களத்திலும் தமிழிலும்). |

அடுத்துவரும் நாட் : வாசினை (சிங்களத்திலும் தமிழிலும்).
கனிஸ்

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.